
# திராவிடத்தால் வாழ்கிறோம்

833

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

109

# கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்: ‘வாழ்நாளெல்லாம் திராவிடச் சிந்தனை!’




தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்** அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

*1957-ஆம் ஆண்டு, சென்னை கடற்கரையில், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தினை நடத்தியது கழகம். பேரறிஞர் அண்ணா அந்தக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார். அவரது உரையைத் தொகுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார், கழக ஏடான ‘நம்நாடு’ பத்திரிகையாளர். அதற்கு முன்பான கூட்டங்கள் வரை கையால் குறிப்பு எடுத்தவர், அந்தக் கூட்டத்துக்கு அப்போதுதான் அறிமுகமாகி இருந்த ‘டேப் ரெக்கார்டர்’ பதிவுக் கருவியைப் பயன்படுத்தினார்.*

*ஆனால், அண்ணாவின் பேச்சு பதிவாகவில்லை. கூட்டம் முடிந்து, அடுத்த நாள் பத்திரிகைக்கு அண்ணாவின் உரையைத் தயார் செய்ய வேண்டிய நிலையில், “கவலைப் படாதீர்கள் அண்ணா, நான் நினைவிலிருந்தே எழுதுகிறேன்” என உறுதி கூறி, அண்ணாவின் பேச்சை அப்படியே எழுதிக் காட்டினார் அவர். அண்ணா வியந்து பாராட்டிய அந்தப் பத்திரிகையாளர் மா.செங்குட்டுவன். ‘கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்’ என்றால், கழகத்தினரும், கலை இலக்கியத் துறையினரும் அறிவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, முத்தமிழறிஞர் கலைஞரின் ஊர்த் தோழனாக, கழகக் கொள்கையில் ஊறி நின்ற உடன்பிறப்பு.*

*அன்றைய தஞ்சை ஜில்லா, இன்றைய திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் திருத்தங்கூர் என்கிற கிராமத்தில், 1928-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் மாணிக்கனார்-விருதாம்பாள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, ஆகியோரின் சொற்பொழிவுகளைக் கேட்டு, தனது இளம் வயதிலேயே பகுத்தறிவு கொண்டு, சுயமரியாதை இயக்கச் செயல்பாடுகளில் தன்னை இணைத்துக் கொண்டவர் செங்குட்டுவன்.*

### நீதிக்கட்சி மாநாடு

*1940-ஆம் ஆண்டு, மன்னார்குடியில் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த காலத்தில், திருவாரூரில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டுக்கு, அவரது ஊரைச் சேர்ந்த உறவினர் ஒருவர் அழைத்துச் சென்றுள்ளார். அந்த மாநாட்டில் பெரியாரையும், நீதிக்கட்சித் தலைவர்களையும் முதன்முதலாக நேரில் பார்த்ததுடன், அந்தக் கூட்டத்தின் வாயிலாக அரசியல் எழுச்சி பெற்று, தொடர்ச்சியாக பெரியாரின் உரைகளைத் தேடிச் செல்லத் தொடங்கினார்.*

*அன்றைக்கு மன்னார்குடி நகரம் திராவிட இயக்க அரசியல் எழுச்சி கொண்ட நகரமாக இருந்தது. பட்டுக்கோட்டை அழகிரி, மன்னை நாராயணசாமி, எம்.ஆர்.ராதா, நாவலர், சி.பி.சிற்றரசு எனப் பலரும் இவர் படித்த பள்ளி விடுதிக்கு அரசியல் வகுப்பெடுக்க வந்துள்ளனர். பதினோராம் வகுப்பு படித்தபோது, பள்ளியில் மாணவர்களைத் திரட்டி **‘திராவிட மாணவர் கழகம்’** உருவாக்கி, அதன் செயலாளராக இருந்தார்.*

*1947-ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை, ‘துக்க நாள்’ என பெரியார் போராட்டம் அறிவித்தபோது, இவரும், சில நண்பர்களும் சுதந்திரதின அணிவகுப்பில் கருப்புச் சட்டை அணிந்து பங்கேற்றுள்ளனர். தலைமை ஆசிரியர் அழைத்து “உங்க ஈ.வெ.ரா. கருத்துகளைப் பள்ளிக்கூடத்தில் வந்து காட்டாதீங்க” என பிரம்படித் தண்டனையுடன், பள்ளியில் இருந்து நீக்கியுள்ளனர். பின்னர், அங்கிருந்து திருவாரூர் வந்து மீண்டும் பதினோராம் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கியுள்ளார். அப்படி வந்த இடத்தில் கலைஞர், கலைஞரின் நண்பர் தென்னவன் என புதிய நண்பர்கள் வட்டம் அரசியல் ஆர்வத்தை மேலும் தீவிரமாக்கியது.*

*1949-ஆம் ஆண்டு ஜூன் மாதம், ‘மாவூர் சர்மா’ என்கிற பார்ப்பனர் வீட்டில் பெரியார் நடத்திய 10 நாட்கள் மாணவர் பயிற்சி முகாமில் கலந்துகொண்டு, சமூகநீதி அரசியலை ஆழமாகக் கற்றவர்.*

### பத்திரிகைப் பணிகள்

*பள்ளிப்படிப்புக்குப் பின் வேலை தேடி சென்னை வந்தவர், கழகம் தொடங்கப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு, கழகத்தின் ஏடாக அண்ணா தொடங்கிய ‘மாலைமணி’யில் செப்டம்பர் 15 அன்று பணிக்குச் சேர்ந்தார். அவர் பணிக்குச் சேர்ந்த அடுத்த இரண்டு நாட்களில் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமானது. அந்தத் தொடக்க நாள் கூட்டத்துக்கு முதலில் வந்து கூட்ட அறிக்கையில் கையெழுத்திட்ட 15 பேரில் செங்குட்டுவனும் ஒருவர். உறுப்பினரான, முதல் ஐவரில் ஒருவர்.*

*பொருளாதார நெருக்கடியால் பத்திரிகை ஓராண்டு காலத்தில் நிறுத்தப்பட்ட நிலையில், 1952-ஆம் ஆண்டில், மயிலாடுதுறையில் கழக முன்னோடி கிட்டப்பாவுடன் இணைந்து, கருணானந்தம் ஆலோசனையுடன் ‘எழுச்சி’ என்ற இதழைத் தொடங்கினார். ஆசிரியர் செங்குட்டுவன், துணை ஆசிரியர் கிட்டப்பா என்கிற பெயருடன் வெளிவந்த இதழ் பெரும் வரவேற்பினைப் பெற்றது. அந்த இதழை அச்சடித்த அச்சகத்தின் உரிமையாளர் காங்கிரஸ்க்காரர். சில இதழ்களுக்குப் பின், இதழின் கருத்துகளுக்குப் பயந்து அச்சடித்துத் தருவதை நிறுத்தினார். பின்னர், அங்கிருந்து சென்னை வந்தவர், ‘விடுதலை’ இதழில் பணிக்குச் சேர்ந்தார்.*

*அப்போது, தி.மு.கழகத்தை பெரியார் தீவிரமாக எதிர்த்துக் கொண்டிருந்த காலம். ஆனாலும், தி.மு.கவைச் சேர்ந்த செங்குட்டுவன் ‘விடுதலை’யில் வேலை செய்வதற்கு பெரியார் எந்த எதிர்ப்பினையும் சொல்லவில்லை. ‘சுவரெழுத்து’ சுப்பையா இது தொடர்பாக, பெரியாரிடம் “விடுதலை அலுவலகத்தில் ஒரு கண்ணீர்த்துளி இருக்கிறானே” எனக்கூறி இருக்கிறார். அதற்குப் பெரியார் “நான் பார்த்துக் கொள்கிறேன், நீ போ” எனக் கூறியதுடன், செங்குட்டுவனுக்கு யாரும் இடையூறு அளிக்கக்கூடாது என்று கண்டித்தும் இருக்கிறார். தேர்தல் பிரச்சாரத்தின்போது, தி.மு.கவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய வேண்டி திராவிடர் கழகத் தோழர்கள் நெருக்கடி அளித்தபோது, அந்தப் பணியில் இருந்து விலகியதுடன், 1957-ஆம் ஆண்டில் கழகத்தின் ஏடான ‘நம்நாடு’ ஏட்டில் பணிக்குச் சேர்ந்தார். 1972-ஆம் ஆண்டு ‘நம்நாடு’ ஏடு நிறுத்தப்படும் வரை அந்தப் பத்திரிகையின் தூணாக நின்றவர் செங்குட்டுவன். 1974-ஆம் ஆண்டு கழக ஏடாக ‘கழகக் குரல்’ தொடங்கியபோதும் அவர்தான் பொறுப்பாசிரியர்.*

### கவிக்கொண்டல்

*கழகத்தில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், கொள்கைப் பற்றுடன் அவர் பத்திரிகையாளராகவே தொடர விரும்பினார். எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் மாநிலங்களவை உறுப்பினராக்குவதாகக் கூறி, அழைப்பு விடுத்தபோது அதை வேண்டாமென்று மறுத்தவர். தொடர்ச்சியாக ‘மாலைமணி’, ‘தமிழின் ஓசை’ என பத்திரிகைப் பணிகளின் ஊடே 1979-ஆம் ஆண்டில் இவர் தொடங்கிய ‘கவிக்கொண்டல்’ இதழ், அவருக்குப் பிற்காலத்திய அடையாளமாக உருவானது.*

*இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு, மலேசியா-கோலாலம்பூரில் நடைபெற்ற 6-வது உலகத்தமிழ் மாநாடு ஆகியவற்றில் பெரும் பங்காற்றியவர் செங்குட்டுவன், 1955-ஆம் ஆண்டில் விடுதலையில் முதன்முதலாக ‘பெரியார் பிறந்த நாள் சிறப்பு மலர்’ தயாரிப்பு தொடங்கி, கழகத்தின் பல மலர் தொகுப்புகள் இவரது பங்களிப்பு இல்லாமல் சாத்தியமில்லை என்கிற அளவுக்கு, ஆழ்ந்த அரசியல் அனுபவம் கொண்டவர் செங்குட்டுவன்.*

*அபேட்சகர்- வேட்பாளர், நகர் மன்றம் - நகராட்சி, அக்கிராசனார் - அவைத்தலைவர் என பிறமொழிச் சொற்களுக்கு மாற்றாக தமிழ்ச் சொற்களின் புழக்கத்துக்கு செங்குட்டுவன் பெரும்பங்காற்றியவர். தொடர்ச்சியாக தமிழிலக்கிய ஈடுபாட்டுடன், திராவிட அரசியலை இளைஞர்களுக்குக் கடத்தி வந்த இவருக்கு 2018-ஆம் ஆண்டு ‘பேராசிரியர் விருது’ அளித்து பெருமை சேர்த்தது கழகம். அந்தப் பெருமையுடன் அடுத்த இரண்டு மாதங்களில் வயது மூப்பு காரணமாக தனது 91-வது வயதில் இயற்கை எய்தினார். திராவிடச் சிந்தனையிலேயே வாழ்நாளெல்லாம் திளைத்திருந்த கவிஞர்-எழுத்தாளர்- பத்திரிகையாளர். அவரது எழுத்துக்கள் என்றென்றும் நிலைத்திருக்கும்.*

> **“திராவிடச் சிந்தனையிலேயே வாழ்நாளெல்லாம் திளைத்திருந்த கவிஞர்-எழுத்தாளர்-பத்திரிகையாளர். அவரது எழுத்துக்கள் என்றென்றும் நிலைத்திருக்கும்.”**

**...துடிக்கும்**

## தேர்வு முடிவுகளே சாட்சி!

மேல்நிலைக் கல்வி, பொதுத்தேர்வு முடிவுகளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் கல்வி முனைப்பு குறித்து, எழுத்தாளர் சம்சுதீன் ஹீரா எழுதியுள்ள அனுபவப் பதிவு இது.

“என் மகள் மாதிரிப்பள்ளியில்தான் படிக்கிறாள். தரமான கல்வி, உணவு, உடை, நோட்டுப் புத்தகங்கள், தங்குமிடம், என ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்கிறது அரசு. நம் குழந்தைகள் உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லவேண்டும் என்கிற அரசின் முனைப்பைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருப்பவன் நான்.

அந்தப் பள்ளியிலிருந்து தேர்ச்சிபெற்று, வெளி மாநிலங்களுக்கோ வெளிநாடுகளுக்கோ மாணவர்கள் உயர் கல்விக்காகச் செல்வதை வருடம் தோறும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். சமீபத்தில்கூட, வெளிநாடு போகிற மாணவர்களுக்கு உதவித்தொகையாக 16 லட்சம் ரூபாயை தமிழ்நாடு அரசு வழங்கிய செய்தியைப் பார்த்தோம். அதுபோக ‘நான் முதல்வன் திட்டம்’, மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் உதவித்தொகை திட்டம் என பல திட்டங்களுக்கும் பின்னே இருப்பது, நம் குழந்தைகளின் கல்வி மேம்படவேண்டும் என்கிற இந்த அரசின் முனைப்பு மட்டும்தான்.

இந்த ஆண்டு +2 தேர்வில் இரண்டு பேர் 600க்கு 599 மதிப்பெண்கள் எடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டமும் நாங்கள் 98% நாங்கள் 97% நாங்கள் 95% என்று பெருமிதம் கொள்கிற செய்திகளை ஊடகங்களில் பார்த்தோம். ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் தேர்ச்சி விகிதம் கிட்டத்தட்ட 95 சதவிகிதத்துக்கு மேல். விடுதலையடைந்து, 78 வருடங்களில் முதல் முறையாக ஒரு மாணவன் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற உ.பி கிராமம் குறித்த செய்தியையும் இதே ஊடகங்களில் சில நாட்களுக்கு முன்பு பார்த்தோம்.

‘Neet scam’ என்று இணையத்தில் தேடிப்பாருங்கள். வட மாநிலங்களில் கல்வி எவ்வளவு ஊழல்மயப்பட்டிருக்கிறது என்று தெரியும். அப்படிப்பட்ட படுமோசமான கல்விக் கட்டமைப்பை வைத்திருக்கிற வடமாநில அரசியல்வாதிகள்தான் கல்வியில் முன்னணி மாநிலமாக விளங்குகிற தமிழகத்தில் கல்வியைத் தரப்படுத்துகிறார்களாம். வெட்கம். நம் மாநிலத்தின் சீரான, வேகமான கல்வி வளர்ச்சியைக் கண்டு பார்ப்பனிய அதிகார மையம் அஞ்சுகிறது. எப்படியாவது அதைச் சீர்குலைத்துவிடத் துடிக்கிறது”.

## ஃப்ளாஷ்பேக்



### தளபதியுடன் ஒரு புகைப்படம்!



பி.இராமச்சந்திரன்

1984-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக, குடந்தை மாநகரத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது குடந்தை மாநகரத்தைச் சேர்ந்த என்னுடைய உறவினர் ஏ.வி.லெட்சுமணன் மற்றும் விஜயலட்சுமி அச்சக உரிமையாளர் மகாலிங்கம் ஆகியோர் தளபதி அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

– **பி.இராமச்சந்திரன்,**
**மயிலாடுதுறை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாரின் தேர்தல் பிரச்சாரம்!

1929-ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி மீண்டும் பெருவாரியான பலத்தைப் பெற்று, ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த வெற்றிக்குப் பெரியாரின் பிரச்சாரமும் சர் பி.டி. இராஜனின் உழைப்புமே காரணமாகும். பொப்பிலி அரசர் முதல்வராகவும், சர் பி.டி.இராஜன், குமாரசாமி ரெட்டியார் ஆகியோர் கூட்டு அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131